Registered with the Registrar of NewsPapers for India R. No. 62828 / 95

Date of Publication : 1st of Every month | Date of Posting : 5th & 6th of Every month

Regd. No. TN / CC (S) DN / 119/ 15-17 | Licensed to Post without Prepayment WPP No. TN/PMG(CCR)WPP-608/15-17

வேணு : 21 | மார்ச் 2016 | கானம் : 8

பிப்ரவரி 12 - 22 - கும்பகோணம் சாஸ்திரா பல்கலைக்கழக வளாகத்தில் மஹாமகத்தை ஒட்டி மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜீ கைங்கர்ய சபா சார்பில் வேதபாராயண மஹோத்ஸவம்







Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No.2, Old No.24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai - 600083 and Printed by Mr.R.Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A, Sivakasi Co-Op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar

NO FAME NO SELF INTEREST ONLY GOD NO NAME















பிப்ரவரி 14 கோபகுடீரம் – சென்னை கண்காட்சி
தி.நகர் தாராசந்த் கலாடா ஜெயின் பள்ளி



தூத்துக்குடி நாமத்வார் பிரதிஷ்டா தினம்
ராதா கல்யாண மஹோத்ஸவம் -21.02.2016 – பம்மல் ஸ்ரீபாலாஜி



பிப்ரவரி மாதம் - சேலம் மற்றும் குடியாத்தத்தில் மாணவர்களுக்கான
மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை - முரளிஜி



பிப்ரவரி 22 – மஹாமக வைபவத்தை ஒட்டி கும்பகோணத்தில்
விருதுநகர் நாமத்வார் சார்பாக மஹாமந்திர நாமகீர்த்தனம்





பிப்ரவரி 12 வசந்த பஞ்சமி
மஹாரண்யம் ஸ்ரீ கல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் பிரதிஷ்டா தினம்






பிப்ரவரி 13 திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில் 200வது
மாத சாதுபோஜனம் விழா மற்றும் 200வது இலவச மருத்துவ முகாம்


















ஜனவரி 21 சென்னை காமராஜ் அரங்கத்தில்
மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை
பாக்யநாதன்ஜி, ராமானுஜம்ஜி



ஸ்ரீ ஹரி :

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி
அவர்கள் அருளாசியுடன்

# மதுரமுரளி

தெய்வீக மாதப் பத்திரிகை

வேணு: 21 மார்ச் 2016 கானம்: 8

ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே

**இந்த இதழில் ...**

| | | | |
|---|---|---|---|
| மதுரமான மஹனீயர்-240 | 05 | வீடு தேடி வருவான் விட்டலன் | 25 |
| பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள் | 08 | சனாதன கோஸ்வாமி | 27 |
| இன்ப கனா ஒன்று கண்டேன் | 09 | பாலகர்களுக்கு ஒரு கதை | 29 |
| கோபாலனிடம் விண்ணப்பம் | 11 | சத்சங்க செய்திகள் | 31 |
| மகாமகம் - சுப்ரமண்ய பாரதி | 13 | ப்ருந்தாவன கண்ணன் | 34 |
| சனாதன புதிர் | 18 | மாலே மணிவண்ணா | 36 |

ஒருவருடைய மார்பு, தலை, மனது, உடல், வாக்கு, பாதங்கள், முழங்கால்கள், கைகள் இவைகள் பூமியில் படும்படியாக நமஸ்காரம் செய்யும்பொழுது, அது எட்டு அங்கங்களுடன் செய்யப்படும் அஷ்டாங்க நமஸ்காரம் ஆகும்.

## ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் கீர்த்தனம்

ராகம் - புன்னாகவராளி தாளம் - ஆதி

உன் காட்சி மட்டுமே என் மனதை
ஆட்சி செய்திட வேண்டும் கண்ணா (உன் ..)

கருமுகில் வண்ணம் கொண்ட மேனியும்
சுருள் சுருளான அடர்ந்த கேசமும்
உருவம் அழகான மயிலின் இறகும்
தருவின் அடியில் நின்றிடும் ஒய்யாரமும் (உன் ..)

அசைந்தசைந்து ஆடிடும் குண்டலங்களும்
இசைந்து இசைத்திடும் குழலோசையும்
அசை மறந்து அடியில் நின்றிடும் ஆவினமும்
திசை எங்கும் பரவிடும் நீல ஒளியும் (உன் ..)

மஞ்சள் பட்டாடை தழுவிய மேனியும்
பஞ்சவர்ணம் கொண்ட அசைந்தாடும் மாலையும்
நெஞ்சை விட்டு அகலாத புன்சிரிப்பும்
கொஞ்சும் மொழி பேசும் சிவந்த அதரங்களும்
(உன் ..)

முன் அட்டை : மதுரபுரி ஆஸ்ரம மதுவனத்தில்
பின் அட்டை - கும்பகோணம் சாஸ்திரா பல்கலைக்கழக வளாகத்தில் மஹாமக மஹோத்ஸவ வேத பாராயணம் - பிப்ரவரி 12- 22, 2016



# மதுரமான மஹனீயர் - 240

-டாக்டர்.ஆ.பாக்யநாதன்

ஸ்ரீஸ்வாமிஜியின் அருளாசியுடன், பிரதி வருடமும் ஜனவரி மாதம் முதல் சனிக்கிழமையன்று, உலகம் முழுவதும் இருபது நாடுகளை சேர்ந்த அன்பர்கள், தொடர் மஹாமந்திர நாமகீர்த்தனம் **Global Nama Relay** கடந்த ஐந்து வருடங்களாக செய்து வருகின்றனர். சென்ற மதுரமுரளி இதழிலும் இதை பற்றி விவரங்கள் பிரசுரித்திருந்தோம். இது எப்படி துவங்கியது? நியூசிலாந்தை சேர்ந்த திரு.வெங்கட்-திருமதி.கவிதா தம்பதிகள் மனதில் எழுந்த சிறிய அழகான எண்ணத்தை ஸ்ரீஸ்வாமிஜி அவ்ர்களிடம் தெரிவிக்க, அவரருளால் அது நாமா ரிலேவாக மாறியது. நியூசிலாந்து ஆக்லாந்து நகரில் **G.O.D** அமைப்பின் சத்சங்கங்களை ஒருங்கிணைத்து நாமப்பணிகளை செய்து வருவது இத்தம்பதிகள்தான். இவர்களின் நெருங்கிய நண்பர் திரு.ரவி-திருமதி.பத்மா தம்பதியினர். ரவி நல்ல குணவான்; நம்முடைய கன்யாகுமரி ஸ்ரீஜய ஹனுமான் மற்றும் குருநாதரின் பரம பக்தர். நியூசிலாந்து **G.O.D** சத்சங்கங்களில் தவறாமல் கலந்துகொண்டு கைங்கரியமும் செய்பவர்.

கல்பதரு தினமான ஜனவரி **1, 2015** அன்றுதான் திரு.ரவி, ஸ்ரீஸ்வாமிஜியை முதன் முதலில் தரிசிக்க, அம்பத்தூர் விவேகானந்தா வித்யாலயாவில் நடைபெற்ற கூட்டு பிரார்த்தனைக்கு வந்திருந்தார். ஆயிரக்கணக்கானோர் கூடி இருந்ததை பார்த்த ரவி, "ஸ்ரீஸ்வாமிஜியுடனும் திரளான அன்பர்களுடனும் இணைந்து நாமம் சொல்ல வாய்ப்பு கிடைத்தது பெரிய பாக்யம் அல்லவா" என நினைத்தவாறு பள்ளி வளாகத்தில் நின்று கொண்டிருந்தார். அந்த கூட்டத்திலும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் மேடைக்கு நடந்து செல்கையிலே இவரை அருகே கூப்பிட்டு, தனியே தரிசனம் தந்தருளினார்கள். இதை தம்மால் மறக்கவே முடியாது என்று ரவி அடிக்கடி சொல்வார்.

ரவியின் ஒரே மகன் ஜெயசிம்மன், நியூசிலாந்து பழக்கவழக்கத்தில் வளர்ந்திருந்தாலும், நம் பாரதீய கலாசாரத்தில்

மிகவும் பிடிப்பு கொண்டவர்; நல்ல உதவும் தன்மை கொண்ட அந்த இளைஞரை பற்றித்தான் பார்க்க போகிறோம்.

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளாணைப்படி ஆஸ்திரேலியா நாமத்வார் திறப்பு விழாவை ஒட்டி, சத்சங்கங்கள் நவம்பர், டிசம்பர் மாதங்களில் ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, பிஜி, பப்புவா கினியா நாடுகளில் நடைபெற்றது. நியூசிலாந்து ஆக்லாந்தில் ஒருவார காலம் நடைபெற்ற, எல்லா நிகழ்ச்சிகளிலும் ஜெயசிம்மன் ஆர்வமுடன் வந்து கலந்து கொண்டார். 12வது படித்து முடித்து, விடுமுறையில் இருந்த அவர், கைங்கரியத்தில் ஒத்தாசையாக சுறுசுறுப்பாக இருந்தார். சத்சங்க முடிவில், ஐந்து நாட்கள் தொடர்ச்சியாக ஸ்ரீஸ்வாமிஜியின் மஹாமந்திர கீர்த்தனமான "கலியையும் பலி கொள்ளும்" என்பதை மையமாக வைத்து, Bhagavatha Dharma - the Path for All என்ற தலைப்பில் சத்சங்கம் நடைபெற்றது. குருநாதர் அருளால் அது நன்கு அமைந்தது. அதன் பூர்த்தியில் ஒரு மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை நடைபெற்றது.

அதில் அனைத்து அன்பர்களும், ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் திருவுருவ படம் முன்பு, மனமுருகி கீர்த்தனம் செய்து, தங்கள் பிரார்த்தனைகளை சமர்ப்பித்தனர். அப்பொழுது ஜெயசிம்மனும் மருத்துவமோ அல்லது பல் மருத்துவமோ படிக்க ஆசை என வேண்டிக்கொண்டார். அதையே அவர் தந்தை ரவியும் தமது பிரார்த்தனையாக வைத்தார். மேலும் இந்தியா திரும்புகையில், குருநாதரிடம் நேரில், ஜெயசிம்மனுக்காக பிரார்த்திக்கும்படி ரவி கேட்டுக்கொண்டார்.

நாமா சொல்லி பிரார்த்திப்பதுதான், மிகவும் பலமான பிரார்த்தனை என குருநாதர் சொல்வாரல்லவா? மேலும் இக்காலத்தில் பிள்ளைகள், நல்ல கல்லூரிகளில் சேர்ந்து படித்து வாழ்வில் முன்னேற வேண்டும் என பெற்றோர் நினைப்பதும் மிகவும் நியாயமானதுதானே? ரவிக்கோ ஜெயசிம்மன் ஒரே பையன் என்பதால், அவர் பிரார்த்தனை ஜெயசிம்மன் நன்றாக படிக்க வேண்டும் என்பதாகவே இருந்தது.


ஆனால், அங்கு மருத்துவ படிப்பு படிக்க இடம் கிடைப்பது, மிக கடினம். காரணம் அவர் ஆசைப்பட்ட அந்த ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் உலகிலேயே உயர்ந்த ஒன்று; கடும் போட்டி நிலவும் துறை வேறு. அவர் நல்ல

மதிப்பெண்கள் பெற்றிருந்தாலும், நிச்சயம் கிடைக்குமென சொல்ல முடியாத நிலைதான் இருந்தது. சென்னை வந்து, ஸ்ரீஸ்வாமிஜியிடம் இவற்றை எல்லாமும் தெரிவித்தேன். ஸ்ரீஸ்வாமிஜியும் அதை கேட்டு விட்டு "நிச்சயமாக நன்றே நடக்கும்" என அருளினார்கள்.

அதை நானும் ரவியிடம் தெரிவித்தேன். ஆனால், சில காலம் கழித்து ரிசல்ட் வந்தபொழுது பார்த்தால், அதில் ஜெயசிம்மனின் பெயர் இல்லை. அது ரவிக்கு ஏமாற்றமாக இருந்தது. மனக்கவலையுடன் என்னை தொடர்பு கொண்டு, மருத்துவம் படிக்க சீட் கிடைக்கவில்லை; பொறியியலுக்கு இடம் கிடைத்துள்ளது. ஆனால் ஜயசிம்மனின் ஆசை அது இல்லை என்பதை சொன்னார். நானும் மறுபடி ஸ்ரீஸ்வாமிஜியிடம் தெரிவித்தேன். அவர் முன்பு சொன்னபடியே, "நாமம் சொல்லி வருவோம்; நிச்சயம் நல்லது நடக்கும்" என்றார்கள். அதுபடியே, விடாமல் நாமம் சொல்லி பிரார்த்தித்து வர, ரவியிடம் தெரிவித்தேன். ஆனால், 'அலாட்மெண்ட் லிஸ்ட் வந்து விட்டது; இனி ஒன்றும் மாறாது; ஜெயசிம்மனுக்கு ஸ்ரீஸ்வாமிஜி சொல்லி இருந்தாலும் பொறியியல்தான் படிப்பான் போலிருக்கிறது' என்று ரவி கிட்டத்தட்ட முடிவே செய்து விட்ட நிலை.

இப்படிப்பட்ட நிலையில், அதிசயமாக ஒருநாள் மாலை தொலைபேசியில் என்னை ரவி அழைத்தார். குரலில் மிகுந்த உற்சாகம். 'ஸ்ரீஸ்வாமிஜி சொன்னது சத்தியமாகி விட்டது. ஜயசிம்மன் ஆசைப்படி பல் மருத்துவ சீட் கிடைத்து விட்டது. அட்மிஷனே முடிந்திருந்த அந்த பல்கலைக்கழகத்தில் ஒருவர் தன் சீட்டை கேன்சல் செய்து விட்டார். அதனால் எங்களை அழைத்து, நாளையே **join** செய்ய சொல்லி விட்டார்கள். எல்லாம் ஸ்ரீஸ்வாமிஜியின் அருள்' என அவர் மகிழ்வுடன் சொன்னதை, நானும் ஸ்ரீஸ்வாமிஜியிடம் தெரிவித்தேன்.

ஸ்ரீஸ்வாமிஜி அதை கேட்டு ஒரு புன்னகை மட்டுமே பூத்து, "இது பகவன் நாமத்தினுடைய மகிமை" என்றார்கள். திருவண்ணாமலை யோகிராம்சுரத்குமார் அவர்கள், **This Beggar is not capable of doing miracles; only Ram Nam is doing miracles** என்பாரல்லவா; அதுதான் நினைவிற்கு வந்தது.



# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிஜீ அவர்களின் பதில்கள்

கேள்வி : பல மஹான்களின் சரித்திரத்தில், அவர்கள் தங்கள் அணுக்க சீடர்களையோ பக்தர்களையோ பார்த்து, "நீ இரண்டு, மூன்று பிறவிகளாக என்னை தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறாய்" என்று சொல்வதை பார்க்கிறோம். மஹான்களின் சம்பந்தம் ஏற்பட்ட பிறகும் கூட, மறுபடியும் பிறக்க வேண்டிய அவசியம் ஏன் ஏற்படுகிறது?

பதில் : பகவான், கீதையில் சொல்லும்பொழுது, 'பஹூனாம் ஜன்மனாம் அந்தே ஞானவான் மாம் ப்ரபத்யதே' என்கிறான். அதாவது ஞானம் என்பது, ஒரே பிறவியில் லபிக்கும் நிலை அல்ல. பல பிறவிகளில் பயிலும் யோக சாதனைகளினாலோ, பக்தியினாலோதான் ஞான நிலை ஒருவருக்கு கிட்டுகிறது. இந்த காரணத்தால், இத்தகைய நிகழ்வுகளை மஹான்களுடன் சம்பந்தப்பட்டவர்களிடம் கேள்விப்படுகிறோம்.

கேள்வி : 'அந்திம ஸ்மரணம்' என்பது மிக முக்கியம் என்பது தெரிகிறது. உயிர் பிரியும் தருணம், பகவானின் நினைவு இல்லை எனில், மறுபடி பிறவி இருக்கும் என சொல்கிறீர்கள். ஆனால், நாமம் சொல்லிக்கொண்டிருந்தாலும், அந்திம காலத்தில் எல்லோராலும் நாமம் சொல்ல முடியும் என்று சொல்ல முடியாதே. காரணம், கோமா போன்ற நிலையிலிருந்து உயிர் பிரிந்துவிட்டால், அந்திம ஸ்மரணம் இருக்காதல்லவா?

பதில் : நீங்கள் சொல்வது உண்மைதான். அதனால், நாமாக நாமம் சொல்லிக்கொண்டிராமல், ஒரு உத்தம குருநாதரிடமிருந்து, நாமத்தை உபதேசமாக பெற்று நாமம் சொல்ல வேண்டும். அப்படி சொல்லி வருகையில், 'அந்திம ஸ்மரணம்' என்பதன் பொறுப்பையும் குருநாதரே ஏற்று கொள்கிறார். ஆதலால், ஒரு உத்தம குருவிடமிருந்து உபதேசம் பெற்று, நாமம் சொல்லி வந்தால், அந்திம ஸ்மரணம் பற்றி கவலைப்பட வேண்டியதில்லை.

# இன்ப கனா ஒன்று கண்டேன்

–நல்ல ஹரி

ஒருநாள் நான் இரவு படுத்து கொண்டிருந்தேன். மனதானது பண்டரிபுரம், பாண்டுரங்கன், அங்கு வாழ்ந்த பக்தர்கள், அவர்களுடைய சரித்திரம் இவைகளை அசை போட்டுக்கொண்டே இருந்தது. மனது, பண்டரிபுரம் போக வேண்டும் என்று ஆசைப்பட்டது. என் மனதை பார்த்து, நானே சில கேள்விகள் கேட்டு கொண்டேன். என்ன அவைகள்? பண்டரிபுரம் போவதற்கு எதற்காக ஆசைப்படுகின்றாய்? மஸ்தக லிங்கமே கிரீடமாகவும், அழகான மகர குண்டலங்கள் தரித்தவனாகவும், பீதாம்பரம் துளசி மாலைகள் அணிந்து யோகபீடத்தில் நிற்பவனாகவும், நெற்றியில் பெரிய சந்தன திலகம் அணிந்தவனாகவும் உள்ள பாண்டுரங்கனை தரிசனம் செய்ய ஆசைப்படுகின்றாயா? அல்லது சந்திரபாகா நதியில், ஸ்நானம் செய்ய ஆசைப்படுகின்றாயா? அல்லது பண்டரி சன்னதியில் அல்லது வீதிகளில் பஜனை செய்ய ஆசைப்படுகின்றாயா? என்று என் மனதை பார்த்து நானே கேட்டு கொண்டேன். இவைகள் எல்லாம் வேண்டாம் என்று சொல்ல முடியுமா?

இவைகளை தாண்டிய ஒரு ஆசை உள்ளது. என்ன அது? பண்டரி வீதிகளில்தானே ஏகநாதர், நாமதேவர், துக்காராம், கான்ஹோபாத்ரா, ஜனாபாய், சேனாநாயி, நரஹரி சோனார், நிவ்ருத்தி தேவர் போன்ற எண்ணற்ற பக்தர்கள் ஆடி, பாடி குதித்து மகிழ்ந்துள்ளார்கள்.

இந்த வீதிகளின் வழியாகத்தான், பலமுறை நடந்திருப்பார்கள். இவர்கள் வெளி உலகத்துக்கு பாண்டுரங்கனால் தெரியப்படுத்தப்பட்ட பக்தர்கள். தெரியப்படுத்தாமல், எவ்வளவோ பக்தர்களும் இங்கு வந்திருப்பார்கள் அல்லவா? அவர்கள் சஞ்சாரம் செய்த

அந்த வீதிகளில் விழுந்து புரள வேண்டும் என்ற ஆசையே பண்டரி செல்ல வேண்டும் என்ற ஆசைக்கு காரணம்.

இதில் இருக்கும் ஆனந்தத்திற்கு ஈடு இணை உண்டா?

இப்படி நான் சிந்தனை செய்து கொண்டே, படுத்து கொண்டிருக்கும்போது, என் சரீரம் மெல்ல மெல்ல மேலே காற்றில் மிதக்க ஆரம்பித்தது. மிதந்து மிதந்து, கடைசியில் பண்டரியில் சென்று ஒரு இடத்தில் இறங்கியது. தெய்வீக சான்னித்யத்துடன் ஒரு இடமாக அது திகழ்ந்தது. மேடை மீது ஒரு அழகான குட்டி பாண்டுரங்கன் பக்கத்தில் தீபம் எரிகின்றது. தூபம் கமழ்கின்றது. பாண்டுரங்கனுக்கு கச்சிதமாக துளசி மாலையும் மற்ற மாலைகளும் சாத்தப்பட்டுள்ளன. மிகவும் சுத்தமாக உள்ளது அந்த இடம்.

என்னை தவிர வேறு யாரும் அங்கு இல்லை. ‘இந்த பாண்டுரங்கன் கோவிலில் உள்ள பாண்டுரங்கன் இல்லையே, இது யார்?’ என்று எனக்கு நானே கேட்டு கொள்கின்றேன். ஓ! கேசவராஜன்! நாமதேவர் பூஜை செய்த பாண்டுரங்கன். குழந்தை நாமதேவர் கொடுத்த உணவை சாப்பிட்ட பாண்டுரங்கன். நாமதேவரை நூற்றுக்கணக்கான அபங்கங்கள் பாட வைத்த பாண்டுரங்கன். நாமதேவர் கொஞ்சிய பாண்டுரங்கன். நாமதேவருடன் விளையாடிய பாண்டுரங்கன். மழையின்பொழுது நாமதேவருடைய வீட்டை தாங்கி பிடித்த பாண்டுரங்கன். இப்படியாக நான் நினைத்து கொண்டிருக்கும்பொழுதே, எங்கிருந்தோ ஒரு மாலை என் கழுத்தில் வந்து விழுந்தது. என் கையில் ஒரு தம்புரா இருந்தது. அந்த கேசவராஜனை சுற்றி தனியாக ஆடிப்பாடி மகிழ்ந்தேன், இரவு முழுவதும். இதுதான் ஏகாந்த பஜனை என்பதோ! பொழுது விடிய ஆரம்பிக்கும்பொழுது, காற்றில் மிதந்து மிதந்து படுத்து கொண்ட இடத்துக்கே வந்து விட்டேன்.

பண்டரிநாத மஹாராஜ் கி ஜெய்!

# கோபாலனிடம் ஒரு விண்ணப்பம்

என்றைக்கும் இல்லாத அதிசயமாக, இன்று எனக்கு தியானம் செய்யலாம் என்ற எண்ணம் ஏற்பட்டது. வழக்கமாக தியானம் செய்யும் அறையில், சுத்தம் செய்து விட்டு, க்ருஷ்ணன் படத்தின் முன்பாக, விளக்கும் ஏற்றி சில ஊதுவத்திகளையும் ஏற்றி வைத்தேன். மின்சார விளக்குகளை எல்லாம் அணைத்து விட்டு, மின் விசிறியை சப்தமில்லாமல் ஓட விட்டேன். ஒரு கம்பளியை எடுத்து, ஆசனமாக போட்டு கொண்டேன். வடக்கு பக்கமாக, அந்த ஆசனத்தில் அமர்ந்து கொண்டேன். பத்மாசனத்தில் அமர்ந்து, கைகளிரண்டையும் மடித்து, மடிமேல் வைத்து கொண்டேன். நிமிர்ந்து அமர்ந்தேன்.

ப்ராணனை சற்று அடக்கி, மனதை அடக்க முயற்சி செய்தேன். இப்படி பலமுறை முயற்சித்தும் பலனில்லை. இரு புருவத்தின் மத்திய பகுதியை பாவனையால் சுழற்றி, ஒரு ஜோதி தியானம் செய்ய முயற்சித்தேன். அதுவும் முடியவில்லை. ஒரு மந்திரத்தை தொடர்ந்து சொல்லி, மனதை அடக்க பார்த்தேன். அதுவும் பலனளிக்கவில்லை. வெளியில் பாத்திரம் விழும் சப்தம், மற்றவர்கள் பேசும் சப்தம் எல்லாம் காதில் விழத்தான் செய்தது. உடலும் சிறிது நேரம் கழித்து ஒத்துழைக்க மறுத்தது. கால் வலி, முதுகு வலி எல்லாம் தெரிய ஆரம்பித்தது. இவைகள் போதாது என்று, மனதில் சில தவறான எண்ணங்கள், அவ்வப்போது தலை தூக்கி என்னை பயமுறுத்தின. கடைசியில் இவற்றையெல்லாம் விட்டுவிட்டு **Auto Suggestions** போல 'மனமே நீ அடங்க வேண்டும்' என்று சொல்லிக்கொண்டிருந்தேன். அதற்கும் ஒன்றும் பலனில்லை.

கடைசியாக, மனம் என்னை எழுப்பி விட்டது. அறையிலிருந்து வெளியே வந்தேன். நண்பர்கள், உறவினர்கள்

இருந்தார்கள். அவர்களுடன் சிரித்து பேசி, ஒரு சாமான்யமான நடவடிக்கைகளில் ஈடுபட்டேன்.

அப்பொழுது என்னுள் திடீரென்று ஒரு கேள்வி எழுந்தது. 'இவ்வளவு நேரமாக மனம் அடங்க வேண்டும், மனம் அடங்க வேண்டும்' என்று முயற்சி செய்து கொண்டிருந்த ஒருவரால், எப்படி அதை பொருட்படுத்தாமல், மற்றவர்களுடன் சகஜமாக சிரித்து பேசி பழக முடிகிறது? அப்பொழுது மனம் அடங்க வேண்டும் என்ற எண்ணம் எனக்கு இருந்ததே தவிர, அந்த ஆசை எனக்கில்லை என்பதை உணர்ந்தேன். மனம் அடங்க வேண்டும் என்ற எண்ணம் ஆசையானால்தான், மனதை அடக்குவதில் உற்சாகமும் தீவிரமும் ஏற்படும்.


மறுநாள் காலையில், கோபாலன் சன்னதியில், நான் சென்று நிற்கும்பொழுது, என்னுடைய முதல் பிரார்த்தனையே 'கோபால! மனது அடங்க வேண்டும் என்ற ஆசையை நீ தருவதோடு மட்டுமல்லாமல், அந்த ஆசை மேலும் மேலும் வளர வேண்டும்' என்று பிரார்த்தித்து கொண்டேன். உலக விஷயத்தில் ஒரு ஆசை ஏற்படுமானால், அதை அடைவதற்கு முயற்சிக்காமல், அடக்குவதற்கு முயற்சிப்பதே அமைதிக்கான வழி. தெய்வீக சாதனை செய்பவர்களுக்கு வரும் தெய்வீக ஆசைகளை அடக்காமல், அதை அடைவதற்கு முயற்சி செய்வதனால் மட்டுமே சாந்தி ஏற்படும்.

ஒரே காந்தத்தை, இரும்பை இழுக்கும்பொழுது காந்தக்கல் என்றும், வடக்கு திசையை காட்டும்பொழுது காந்த முள் என்றும் கூறுகின்றோமோ, அதுபோல் மனதைத்தான், எண்ணங்கள் எழும்பொழுது 'மனது' என்றும், சிந்திக்கும்பொழுது 'அறிவு' என்றும், கூறுகின்றோம்.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# *மகாமகம்*

-மகாகவி சுப்ரமண்ய பாரதி



இந்திரனை தேவதேவன் என்பர். மற்ற மனிதருக்கு வானவர் எப்படியோ, அப்படி வானவர்க்கு அவன் என்பது குறிப்பு. வடமொழியில், வால்மீகி காளிதாசர்களையும், தமிழில் கம்பனையும் புகழேந்தியையும், இங்கிலீஷில் ஷெல்லியையும், 'கவிகளின் கவி' என்று சிறப்பித்து சொல்கிறார்கள். அதாவது மற்ற மனிதருக்கு கவிகளால் எத்தனை புதிய சுவை கிடைக்கிறதோ, அத்தனை புதிய சுவை கவிஞருக்கு அவ்வால்மீகி முதலியவர்களிடம் கிடைக்கிறதென்பது குறிப்பு.

அதுபோல, கும்பகோணத்திலுள்ள அமிர்த வாவிகள் என்று சொல்லப்பட்ட பொற்றாமரை குளம், மஹாமக குளம், இந்த இரண்டும், 'புண்ய தீர்த்தங்களுக்குப் புண்ய தீர்த்தம்' என்று புராணம் சொல்கிறது. அதெப்படியெனில், முற்காலத்தில் ஒன்பது தீர்த்த தேவதைகளும் ஈசனிடத்தில் சென்று, "கடவுளே, உலகிலுள்ள பாவிகளெல்லாரும் எங்களிடம் வந்து மூழ்கித் தங்கள் பாவங்களையெல்லாம், கரைத்துவிட்டுப் புண்ணியாத்மாக்களாகி செல்கின்றனர். நாங்கள் சம்பாதிக்கும் இந்த பாவங்களுக்கெல்லாம், விமோசனம் அருள் புரிய வேண்டும்" என்று பிரார்த்தனை செய்தனர்.

அந்த தீர்த்த தேவதைகளிடம் கருணை பாவித்து எம்பெருமான், 'புண்யதீர்த்தங்களே! பாவங்களாலே தீண்டப்படாத அமிர்த வாவிகள் இரண்டை, நான் கும்பகோணத்தில் அமைத்திருக்கிறேன். அங்கு நீராடினால் உங்களுடைய பாவங்கள் விலகிவிடும்' என்று கட்டளை புரிந்தார். பன்னிரெண்டு வருஷங்களுக்கொரு முறை, இங்கு கங்கை முதலிய தீர்த்த தேவதைகள் வந்து ஸ்நானம் புரியும் சமயமாகிய மஹாமக புண்ய காலம், நேற்று பிப்ரவரி 22

செவ்வாய்க்கிழமை அன்று, கும்பகோணத்தில் கொண்டாடப்பட்டது. லக்ஷக்கணக்கான ஹிந்துக்கள் நேற்று அதில் ஸ்நானம் செய்திருப்பார்கள்.

ஆனால், 'இத்தனை பேர்களும் ஸர்வ பாபரஹிதர்களாய் பரம சுத்தத்தன்மை எய்தி விடுவார்களோ' என்று சில மத பற்றில்லாதார் ஆட்சேபிக்கலாம். தீர்த்த ஸ்தலங்கள், புண்ய க்ஷேத்திரங்கள் போன்றவை எல்லா மதத்தினர்களுக்கும் பொதுவாக அமைந்திருக்கின்றன. யூதர்கள் யெருசலேமை, புண்ய க்ஷேத்ரமென்கிறார்கள். கிறிஸ்தவர்கள் யெருசலேம், நஜரேத், ரோமாபுரி முதலிய பல புண்ய க்ஷேத்ரங்களை கொண்டாடுகிறார்கள்.

முஸ்லீம்கள் மக்கம், மதீனம், யெருசலேம், முதலிய கணக்கற்ற க்ஷேத்ரங்களை கொண்டாடுகிறார்கள். பௌத்தர் கயை முதலிய ஆயிரக்கணக்கான புண்ய க்ஷேத்ரங்களை போற்றி வருகிறார்கள். எனவே அறியாமை காரணமாகவோ, மறதி காரணமாகவோ, சில கிறிஸ்தவர்கள், பாதிரிகள், புண்ய க்ஷேத்ர யாத்திரை, ஹிந்துக்களுக்கு மாத்திரம் விசேஷமாக ஏற்பட்ட வழக்கமென்று கருதுகிறார்கள்.

ஹிந்து மதத்தின் மீது, இவ்விஷயத்தில் பழி கூறுவதை நாம் புறக்கணித்து, மதவாதிகளுக்குள்ளே இவ்வழக்கத்தை மறுத்துரைப்போர் யாருமிருக்க நியாயமில்லாததால், மதப்பற்றில்லாதவர்களே மேற்கூறிய கேள்வி கேட்டார்களென்று குறிப்பிட்டோம்.

ஆனால் மதப் பற்றுடையார், அஃதற்றோர் என்னும் இருதிறத்தாரும் உணர்ந்து கொள்ளும்படி, இது போன்ற தீர்த்த யாத்திரைகளின் தத்துவத்தை இங்கு விளக்குவோம். இவற்றில் பாவமழிந்து புண்யத்தன்மை பெற வேண்டுமானால், உண்மையான நம்பிக்கை இருக்க வேண்டுமென்று நம்முடைய புராதன இந்து சாஸ்திரங்கள் மிக தெளிவாக வற்புறுத்தி இருக்கின்றன. உண்மையான மன ஈடுபாடின்றி, கங்கையில் முழுகினாலும், பாவ கர்மம் தொலையாதென்று சாஸ்திரங்கள் தெளிவுபட தெரிவிக்கின்றன. இனிமேல், நாம் பாவம் பண்ணுவதில்லையென்ற நிச்சயம் வேண்டும்.

**தீர்த்த யாத்திரையின் அர்த்தமும் பயனும்** - மேற்கூறிய இந்த தீர்மானம்தான், பரிசுத்த தன்மை கொடுக்கிறது. ஒருவன் இக்கணம் முதல் பாவம் செய்வதில்லை என மனவுறுதி செய்து கொள்ளுதலாகிய அக்னி மயமான செய்கையாலேயே, அவன் அதுவரை செய்த பாவமெல்லாம் எரித்துவிடப்படுகிறது.

"ஜ்ஞானாக்னி: ஸர்வ கர்மாணி பஸ்மஸாத் குருதே ததா" என்று பகவத்கீதையில் கடவுள் சொல்லி இருக்கிறார். பாவத்தை இனி செய்யவில்லை என்ற தீர்மானம், உண்மையாக இருக்க வேண்டும். ஞானமே அவ்வளவுதான். அதை காட்டிலும் பெரிய ஞானம் கிடையாது. சிலர் தவத்தால், சிலர் தானத்தால், சிலர் தியானத்தால், சிலர் பூஜையால் ஞானம் எய்த முயல்கிறார்கள். ஆனால் எல்லா வழிகளும் உண்மையான ஞான வழிகளே. இவையெல்லாம் ஞானத்தை தரும். ஆனால் எந்த வழியாலே தரும்?

பாவத்தை தீர்த்து விடுதலையாகிற வழியிலே தரும். அவற்றால் பாவம் நீங்கும். அதனால் அறிவு மயக்கம் தெளியும். அதிலிருந்து ஞானம் உண்டாகும். ஞானமாவது எல்லாம் கடவுள் மயமென்ற அனுபவம்.

பாவம் என்பது தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பம் விளைவித்தல். இங்ஙனமே புண்யமாவது, தனக்கேனும் பிறர்க்கேனும் துன்பக்கலப்பில்லாத சுத்தமான இன்பம் விளவித்தற்குரிய செய்கை, என்பது சாஸ்திரகோடிகளின் பரம சித்தாந்தம். எல்லாம் ஆத்மா, எல்லாம் கடவுள், ஆதலால் எல்லாம் தான் என நினைத்தால் பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிக்கும் குணம் நீங்கி விடும். அதாவது பாவம் போய்விடும்.

நியாயம் புண்யம், அநியாயம் பாவம், நன்மை புண்யம், தீமை பாவம், சத்யம் புண்யம், அசத்தியம் பாவம், திருப்தி புண்யம், துக்கம் பாவம், மரணமாவது பாவத்தின் கூலி என்று கிறிஸ்தவ வேதம் சொல்கிறது.

இங்ஙனம் பாவத்தை துறந்து விட விரும்புவோனுக்கு மனோ நிச்சயமும், ஞான உதயமும் கதியாயின், பண செலவு செய்து ரயிலேறி கும்பகோணத்திற்கும் காசிக்கும்

ராமேஸ்வரத்திற்கும் ஏன் போக வேண்டும் என்று சிலர் வினவக் கூடும்.

மன மாறுதல்கள் நிரந்தரமாவதே விரதங்கள் என்று கூறப்படும். அப்படிப்பட்ட சங்கல்பங்கள், விரதங்கள் எனப்படும். இந்த விரதங்கள், மனிதருடைய நினைப்பில் நன்றாக அழுந்தும் பொருட்டு, ஆன்றோர் உலகமெங்கினும் இவற்றிற்கு சில சடங்குகள் வகுத்திருக்கிறார்கள்.

கல்வி தொடங்க பெறுகிறபோது, ஒரு சடங்கு நடத்தப்படுகிறது. விவாகம் பண்ணும்போது, மிகவும் கோலாகலமான கிரியைகள் நடக்கின்றன. புதுவீட்டில் குடி புகும்போது ஒரு சடங்கு நடத்துகிறோம்.

இவற்றின் நோக்கம் நாம் அமங்கலத்தை நீக்கி மங்கலத்தை சாஸ்வத உடைமையாக செய்து கொள்ள வேண்டும் என்பதே. நான் மேலே கூறியபடி மரணம் பாவத்தின் கூலி என்று கிறிஸ்தவ வேதம் சொல்வதை கருதுமிடத்தே, அமங்கலம் அனைத்திலும் அமங்கலமானது பாவமென்று விளங்குகின்றது.

மங்களங்களிற் சிறந்தது புண்யமென்பதும் வெளிப்படை. இப்படிப்பட்ட பாவத்தை களைந்து புண்யத்தை போர்த்து கொள்வதாகிய ராஜ விரதத்திற்கு ஒரு சடங்கு வேண்டாமா?

நன்றி - ராமகிருஷ்ண விஜயம்

**1921** சுதேசமித்திரனில் பாரதியார் எழுதியது

---

மரண சமயத்தில், ஒருவருக்கு கற்பனைக்கு எட்டாததும் வர்ணிக்க முடியாததுமான ஒரு வலி இருக்கும். அப்பொழுது மனது கலங்கும். கலங்கிய மனதில் பலவிதமான சிந்தனைகள் வந்து அலைமோதும். கடைசியாக நிற்கும் சிந்தனையே, மறுபிறவியை நிச்சயிக்கும்.

-மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

நீ பக்தி செய்யும் தெய்வத்தால், 'எதையும் உனக்கு சாதித்து தர முடியும்' என்ற நம்பிக்கை இருந்தால்தான், உன்னால், நம்பிக்கையுடன் பக்தி செய்ய முடியும். மற்ற தெய்வங்களோ, சில விஷயங்களில் உன்னை காப்பாற்றி விட்டு, சில விஷயங்களில் காப்பாற்ற முடியாமல், கைவிரித்து விடும். ஆகவே, நாம் பகவான் கிருஷ்ணன் ஒருவனையே சர்வதா ஆஸ்ரயிக்க வேண்டும்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

**சனாதனப்புதிர் பகுதி** 83 -- **விடைகள் -ஆத்ரேயன்**

1. பூமிதேவிக்கும் உபேந்திரனுக்கும் (விஷ்ணுவின் அம்சம்) பிறந்த குழந்தை.
2. விஷ்ணு மூன்று உலகங்களையும் அளக்கையில் அவர் வியர்வை பூமியின் மீது பட, அங்காரகன் தோன்றினான்.
3. (மத்ஸ்ய) தக்ஷனை சம்ஹரிக்க வீரபத்திரனை சிவன் உருவாக்கினார். பிறகு அந்த வீரபத்திரனை சமாதானம் செய்து அங்காரக கிரஹமாக மாற்றினார். (வாமன)அந்தகாஸுரனை சிவன் கொன்ற பிறகு அவரது வியர்வை தரையில் பட்டு தணலாக மாற, அதில் இருந்து உதித்தவன் அங்காரகன்.
4. புதனை - குருபத்னியான தாரைக்கும் சந்திரனுக்கும் பிறந்த குழந்தை.
5. வஸிதா(ஸ்ரத்தா) -அங்கிரஸ் இவர்களுக்கு பிறந்த குழந்தை ப்ருஹஸ்பதி. பாகவத புராணம் அக்னியின் பிள்ளை என்று சொல்கிறது.
6. சுக்ராச்சாரியார்.
7. சுக்ர நீதி.
8. காருகற்பத்திய சூத்திரம், சுக்ர நீதி, கௌண்டில்யம், மனு நீதி, விதுர நீதி என்று அழைக்கப்படுகிறது.
9. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு.
10. நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, கலித்தொகை, அகநானூறு, புறநானூறு, பரிபாடல் ஆகியவை.

11. கலித்தொகை
12. மருதளின நாகனார் என்ற புலவர் பாடிய மருதத்திணையின் 34வது பாடல்.
13. மகாமகோபாத்தியாய முதுபெரும்புலவர் பண்டிதமணி மு.கதிரேச செட்டியார் - 1926.
14. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக.
15. சாணக்கியர் இயற்றிய கௌண்டில்யம் - மற்றும் கம்பர் இயற்றிய காவியங்கள்.

---

## சனாதனப்புதிர் பகுதி 83 - <u>கேள்விகள்</u>- ஆத்ரேயன்

1. ப்ரஹ்மவைவர்த்த புராணம் - அங்காரகனுடைய தாய் தந்தையர் யார்?
2. பத்மபுராணம் அங்காரகனுடைய பிறப்பை எப்படி சொல்கிறது?
3. மத்ஸ்ய, வாமன புராணங்கள் அங்காரகனை பற்றி என்ன சொல்கிறது?
4. க்ருஹஸ்பதி என்று யாரை சொல்கிறார்கள்? இவருடைய தாய், தந்தை யார்?
5. ப்ருஹஸ்பதி தாய், தந்தை யார்? பாகவதம் 4வது ஸ்கந்தம் இவரை யார் பிள்ளை என்று சொல்கிறது?
6. ஔசநசம் என்ற நூல் இயற்றியவர் யார்?
7. ஔசநசம் - இந்த நூலின் சுருக்கம் எப்படி அழைக்கப்படுகிறது?
8. பிரஹஸ்பதி, சுக்ராச்சாரியார், சாணக்யர், மனு, விதுரர் இவர்கள் எழுதிய மீதி நூல்களின் பெயர் என்ன?
9. சங்க காலத்தில் எந்த இரு பிரிவுகளில் நூல்கள் எழுதப்பட்டன?
10. எட்டு தொகை நூல்கள் யாவை?
11. எந்த எட்டு தொகை நூலில் சுக்ர நீதியை பற்றிய குறிப்பு காணப்படுகிறது?
12. சுக்ர நீதியை பற்றிய குறிப்பு கலித்தொகையில் எங்கு காணப்படுகிறது?
13. சுக்ர நீதியை முதலில் தமிழில் மொழி பெயர்த்தது யார்? எந்த ஆண்டு?
14. தமிழர்களுக்கு சுக்ர நீதியை பற்றி எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு தெரியும்?
15. சுக்ர நீதி மற்ற எந்த நூல்களில் காணப்படுகிறது?

பொதுவாக யாராவது நமக்கு நன்மையை செய்தால், அவருக்கு மிகுந்த நன்றி என சொல்வோம். பணமோ, பொருளோ, உடல் உழைப்பினாலோ அல்லது வேறு எந்த விதத்தினாலோ நமக்கு நன்மையை செய்து, அதனால் நாம் நன்மை அடைகையில், நன்றி உணர்வுடன் இருப்போம். யார் நன்மை செய்தாரோ அவரிடம் ஒரு மரியாதை உணர்வு தங்கி இருக்கும். சமயத்தில் செய்த உதவி எனில், கண்கள் பனித்து நிற்கும். ஆனால், இது மட்டும் நன்றி தெரிவிப்பது ஆகாது.

உதாரணமாக, ஒருவர் நம்மை பள்ளியில் சேர்த்து, தாம் கஷ்டப்பட்டு சம்பாதித்த பணம் தந்து உதவி, நல்ல ஆகாரம், உடை, கல்வி என இப்படி நாம் நன்கு படிப்பதற்கு வேண்டிய அனைத்து அத்யாவசிய தேவைகளையும் மனமுவந்து செய்கிறார் என வைத்து கொள்வோம். அதற்கு பிரதியாக, நாம் அவருக்கு வாயினாலும் மனதினாலும் நன்றி செலுத்துவோம் என்றால், அது சரியே. ஆனால் அது மட்டும் போதுமா? நன்றாக படிப்பதற்குத்தானே உதவினார். நன்றாக கல்வி கற்பதே அவருக்கு செய்யும் சரியான நன்றி தெரிவித்தல் ஆகும். அவரும் அதில் அதிகம் சந்தோஷப்படுவார்.

அப்படியே உலகில் பகவான் நமக்கு பலவிதத்திலும் பல சகாயங்களை செய்திருக்கிறான். நல்ல கண் தந்திருக்கும் அவனுக்கு எப்படி நன்றி செலுத்தலாம்? உதாரணமாக அவன் கோவில் திருவுருவங்களை தரிசித்து ஆனந்தப்படலாம்; அல்லது நன்றாக பாகவத பாராயணம் செய்யலாம்! இப்படி எவ்வளவோ!

நல்ல சரீரம், நல்ல வாழ்வு, நல்ல அறிவு எல்லாம் தந்து நல்ல சத்சங்கத்தையும் ஒரு அருமையான குருநாதரையும் பகவான் அருளுகிறான். எதற்கு? பகவான் மனித பிறவியையும், அதில் சௌகரியங்களையும் நாம் முக்தி பெறுவதற்கே தருகிறான் என்பதால், இந்த பிறவியில் குருநாதரை அண்டி முக்தி பெறுவதே, பகவானுக்கு உண்மையான நன்றி செலுத்துவது ஆகும்.

- மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி

# Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji



## Guruuram Consulting Private Ltd

# வீடு தேடி வருவான் விட்டலன் -25

தொலைக்காட்சியில் பல்லாயிரக்கணக்கான உள்ளங்களை கொள்ளை கொண்ட ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் அருளுரைகளின் தொகுப்பு

---

**ஸ்ரீஞானேஸ்வரர்-14 (பிரதிஷ்டானபுரம்)**

பண்டிதர்கள் முன் குழந்தைகளே தங்களை பற்றி மிக ஆச்சரியமாக எடுத்து சொல்லிக்கொண்டனர்.

நிவ்ருத்தி தேவர் : உலக ஆசை என்பது ப்ரவ்ருத்தி மார்க்கம். உலக ஆசைகளை ஒழித்து பகவானை நோக்கி போகும் மார்க்கமே நிவ்ருத்தி மார்க்கம். பகவானை நோக்கி போகும் மார்க்கத்தை எடுத்து சொல்ல வந்திருக்கும் எனக்கு நிவ்ருத்தி தேவன் என்று பெயர்.

ஞானேஸ்வரர் : எனக்கு தெரியாத விஷயமே கிடையாது. எனக்கு எல்லாம் தெரியும். நான் சதா சர்வ காலமும் எல்லா இடத்திலும் எல்லாவற்றையும் பாண்டுரங்கனாகத்தான் பார்க்கிறேன். இது எனக்கு அனுபவம். என் பெயர் ஞானேஸ்வரன்.

சோபான தேவர் : முக்தி அடைவதற்கு போக வேண்டிய வழியை படிக்கட்டுகளாக அமைத்து கொடுக்க வந்திருக்கும் என் பெயர் சோபான தேவன்.

முக்தாபாய் : முக்திக்கான வழியை திறந்து விடக் கூடியவள் என்பதால் என் பெயர் முக்தாபாய்.

இந்த குழந்தைகளின் பேச்சைக் கேட்ட பண்டிதர்கள் ஒருவரை ஒருவர் பார்த்து பேசிக் கொண்டனர். அவர்கள் பேச்சில் கிண்டலும் ஏளனமும் நிரம்பி இருந்தது. "பார்த்தாயா! சன்யாசி பெற்ற குழந்தைகள் என்றாலும் பேச்சில் எப்படி சாமர்த்தியமாக இருக்கின்றன. இவர்களின் பேச்சிற்கு குறைச்சல் ஒன்றும் இல்லை. ஜம்பம் அடித்துக் கொள்வதைப் பார்" என்றார்கள்.

அந்த குழந்தைகள் அழுதுகொண்டு, பண்டிதர்களை மறுபடி மறுபடி பூணூல் போட்டு விடுமாறு கேட்டு கொண்டார்கள். அவர்களுக்கு இடையில் சுவாரஸ்யமான விவாதம் நிகழ்ந்தது.

பண்டிதர்கள் : உங்களுக்கு பூணூல் போட வேண்டியதன் அவசியம் என்ன? எதற்காக மறுபடி சபையை கூட்டுகிறீர்கள்?

ஞானேஸ்வரர் : பூணூல் போடுவதால் எங்களுக்கு விசேஷ பலன் ஒன்றும் கிடைக்க போவதில்லை. சமூக அங்கீகாரத்திற்காகத்தான் கேட்கிறோம்.

பண்டிதர்கள் : பூணூல் போடுவதால் பயன் ஒன்றும் இல்லை என்கிறாய். ஆனால் அதை போட்டு விடுங்கள் என்கிறாய்.

ஞானேஸ்வரர் : பூணூல் போடுவதே கல்வி கற்கத்தானே? கல்வியும் ஞானம் அடைவதற்குத்தானே? நாங்களோ இப்பொழுதே ப்ரும்ம ஞானம் அடைந்தவர்கள் தான்.

பூணூல் போட்டுக் கொண்டவன் திவிஜன் என்கிற இரு பிறப்பாளன். அவன் காயத்ரியை அனுசந்தானம் செய்து தேஜஸை சேர்த்துக் கொண்டான். அவன் விப்ரன். விப்ரன் சாஸ்திரங்களை நன்றாக சொல்வான் எனில் அவன் சாஸ்திரி. சாஸ்திரி அக்னி ஹோத்ரங்களையும், யாக, யக்ஞங்களையும் சரியாக செய்வார் எனில் அவர் ச்ரௌதி. வேத மந்திரங்களை ஜபம் செய்து சித்தி பெற்று தேவதைகளை தரிசனம் செய்வான் எனில் அவனே ரிஷி. மனதை உற்பத்தி ஸ்தானத்தில் அடக்குபவன் முனி. எங்கும் பரப்ரும்மத்தை பார்ப்பவன் ஞானி. அவனே ப்ராம்மணன். அத்தகைய ப்ரும்ம ஞானம் எங்களுக்கு சித்தித்து இருக்கிறது.

ஞானேஸ்வரரின் பதிலைக் கேட்டு பண்டிதர்கள் சிரித்தனர். குழந்தைகள் ஏதோ கிரந்தத்தை படித்து விட்டோ, யாரோ ஒருவர் சொல்வதை கேட்டோ இப்படி பேசுகின்றனர் என்று நினைத்தனர். ஏனெனில் அங்கு இருக்கும் வித்வான்களும் இந்த விஷயங்களை அறிந்தவர்கள்தானே? அவர்களுக்கு அந்த அனுபவம் கிடையாதே?

அந்த பண்டிதர்களில் விஷம ஸ்வபாவம் படைத்த ஒரு சாமவேத பண்டிதர் இருந்தார். அந்த சமயத்தில் கோதாவரியில் இரு எருமை மாடுகள் நன்றாக நீரில் ஊறிக் கொண்டு இருந்தன. எருமை தமோ குணம் கொண்டது. நீரில் இருந்தால், அப்படியே இருக்கும். அசையவே அசையாது. அந்த எருமையை பார்த்தவுடன், அவர் சிரித்தவாறு பேசினார்.

பண்டிதர் : இங்கே வாப்பா! உன் பெயர் ஞானேஸ்வர் தானே?

(தொடரும்)

# ஸனாதன கோஸ்வாமி

12

- ஜனனி

*மதனமோஹனுடன், ஸனாதனர் யமுனா தீரத்தில் ஒரு குடிசை அமைத்து, அங்கே அவனை பூஜிக்கலானார். சென்ற இதழில் ...*

*மதன்மோஹனுக்கு, வெண்ணையும் கல்கண்டும் சாப்பிட ஆசை எழுந்தது. அதனால், மிகவும் தீனமாக ஸனாதனரிடம், "ஸாது பாபா! இந்த வரட்டு ரொட்டி என் தொண்டைக்குக் கீழ் இறங்க மறுக்கிறது. சிறிது நெய்யும் வாங்கி வருவாயானால்...." என்று கூறி முடித்ததுதான் தாமதம்; ஸனாதனருக்கு வந்ததே கோபம். அவர் மதனமோஹனிடம் மிகவும் கோபத்துடன், "இதோ பாரப்பா! உண்மை நிலையை கூறிவிடுகிறேன். என்னிடம் இந்த வரட்டு ரொட்டிதான் கிடைக்கும். வெண்ணை - சர்க்கரை எல்லாம் வேண்டுமென்றால், யாராவது தனிகர் வீட்டிற்கு செல்ல வேண்டியதுதானே! என்னை போன்ற பிக்ஷுவிடம் இதுதான் கிடைக்கும். உனக்கு தொண்டைக்கு கீழ் இறங்கவில்லை என்பதற்காக, நான் போய், ஏதாவது பணக்காரனிடம் நெய்யும் சர்க்கரையும் கேட்க முடியுமா என்ன? சிறிது யமுனை ஜலத்துடன் விழுங்கி விடு. வெறும் மண்ணைக் கூட உண்டவன்தானே நீ!" என்று கூறினார். மதன்மோஹனின் முகம் சிறிதாகிவிட்டது. மௌனமாகிவிட்டான். கௌபீனம் மட்டுமே அணிந்த இந்த ஸந்யாஸியிடம் அவன் வேறென்ன எதிர்பார்க்க முடியும்!*

**ஆனால், மறுநாள் ஸனாதனர் ஒரு பெரிய பணக்கார வ்யாபாரி தன்னை நோக்கி வருவதைக் கண்டார். பஜனை செய்து கொண்டிருந்த இவரை தொலைவிலிருந்தே ஸாஷ்டாங்கமாக நமஸ்கரித்து, அந்த வ்யாபாரி தைன்யமாக, "பாபா! என்னுடைய கப்பல் யமுனையில் சிக்கிக் கொண்டுவிட்டது. அது வெளியே நல்லபடியாக வர தயவு கூர்ந்து ஆசீர்வதியுங்கள். நீங்களே எனக்கு அடைக்கலம்" என்றான்.**

**அவனிடம் ஸனாதனர், "தம்பி! எனக்கு ஒன்றுமே தெரியாது! இந்த குடிசைக்குள் ஒருவன் இருக்கிறான். அவனிடம் கேள்" என்றார்.**

**வ்யாபாரியும் மதன்மோஹனிடம், "ஹே பகவன்! என்னுடைய கப்பல் நல்லபடியாக வெளியே வந்தால், அதில் செய்யும் வ்யாபாரத்தில் வரும் பணத்தில் பாதியை உனது**

ஸேவைக்கு அளிக்கிறேன்" என்று ப்ரார்த்தித்தான். பின் கேட்கவும் வேண்டுமா? அக்கணமே கப்பல் வெளியேறி விட்டது. அக்காலத்தில் ரயில், மோட்டார் வண்டிகள் போன்றவை இல்லாததால், நதிகளில் ஓடும் கப்பல் மூலம்தான் பெரும்பாலும் வ்யாபாரங்கள் நடக்கும். அந்த வ்யாபாரியின் சரக்கு இரட்டிப்பு லாபத்தைக் கொடுத்தது. உடனே அந்த வ்யாபாரி, பல ஆயிரக்கணக்கான ரூபாயை செலவழித்து, மதன்மோஹனனுக்கு ஒரு கோவில் நிர்மாணம் செய்தான். மேலும் பகவானின் ஸேவையின் பொருட்டு பூஜாரி, சமையல்காரர்கள், வேலையாட்கள் என்று பலரை நியமித்தான். இன்றும் அந்த கோவில் ப்ருந்தாவனத்தில் உள்ளது.

ஸனாதனர் இயற்றிய நான்கு க்ரந்தங்கள் மிகவும் ப்ரஸித்தம். அவை ப்ருஹத் பாகவதம், ஹரிபக்திவிலாஸ், வைஷ்ணவ தோஷினி மற்றும் லீலாஸ்தவம். எழுபது வயது வரை வாழ்ந்த ஸனாதன கோஸ்வாமி, 1558ஆம் ஆண்டு ஆடி மாதத்தின் சதுர்த்தசியன்று கோலோகமடைந்தார்.




75 & 77, KG Marina Bay, Santhome High Road, Santhome, Chennai - 600 004
Phone: 044 - 42144662, 43033313, 43033326
contact@buddiesinfotech.com www.buddiesinfotech.com

## பாலகர்களுக்கு ஒரு கதை



### தப்பிக்க தந்திரம்!

குளம் ஒன்றில் மீன்கள் சந்தோஷமாய் வாழ்ந்து கொண்டிருந்தன. தெளிந்த நீர்நிலையாக விளங்கிய அந்த குளத்தில் மீன்கள் குடும்பத்தோடு கூட்டம் கூட்டமாக ஓடி ஆடி விளையாடி மகிழ்ந்து இருந்தன. கொஞ்ச நாள் கழித்து மீன்களின் நிம்மதிக்கு ஆபத்து வந்தது. தினமும் ஒரு மனிதன், காலையில் வந்து வலை விரித்து மீன்களை பிடித்து கொண்டு போய் விடுவான். அவன் தவறாமல் தினமும் வருவான். தினமும் மீன்கள் செய்வதறியாமல் மாட்டி கொள்ளும். திடீரென மாட்டி கொள்வதால் ஓட இயலாது. இன்னும் சிலவற்றுக்கோ வலையில் மாட்டி கொள்ள போகிறோம் என்று தெரிந்தாலும் கூட எங்கேயும் ஓட தெரியாது. இது தினமும் நடந்து அந்த மீன்கள் கூட்டத்துக்கு பெரும் கவலையையும் பயத்தையும் தந்தது. குளத்தை விட்டு எங்கே போவது?

ஆனால் அதே கூட்டத்தில் ஒரு சிறு மீன் இருந்தது. அது பயமே இல்லாமல், துள்ளி விளையாடி சந்தோஷமாக காலம் கழித்தது. அது இதுவரையில் வலையில் மாட்டி கொள்ளவில்லை. ஆனால் அதற்கு பயமே இல்லை. எப்படியோ வலையிலிருந்து தப்பித்து கொள்ளும் தந்திரத்தை, அது கற்று கொண்டிருந்தது. பெரிய மீன்களுக்கும் கூட, இந்த மீன் எப்படி தைரியமாகவும் சந்தோஷமாகவும், வலையில் மாட்டி கொள்ள போகிறோம் என்ற பயம் துளியும் இல்லாமல் இருக்கிறதே என்று, ஆச்சரியப்பட்டன. பெரிய மீன்களான தாங்களே தப்பிக்க முடியாது போக, சிறு மீனான இதுவோ அனாயசமாக தப்பித்து வருகிறதே!

அந்த தந்திரம் என்ன என்று தெரிந்து கொள்ள பெரிய மீன்கள் ஆசைப்பட்டன. அந்த ஆவலை அடக்க முடியாமல் எல்லாம் ஒன்று கூடி, இந்த சிறிய மீனை பார்க்க வந்தன.

"ஏய் சிறு மீனே உன்னிடம் பேச வந்திருக்கிறோம்".

"என்னிடமா?" என ஆச்சரியமாக கேட்டது குட்டி மீன். "ஆமாம். எப்படி நீ தினமும் மனிதன் விரிக்கும் வலையில் மாட்டி கொள்ள மாட்டோம் என தைரியமாக இருக்கிறாய்? உனக்கு பயமே இல்லையா? நீ மாட்டி

கொள்ளவே மாட்டாயா?" என்றெல்லாம் கேட்டன.

அந்த குட்டி மீன் சந்தோஷமாக, "எனக்கு பயம் எல்லாம் கிடையாது. நான் வலையில் மாட்டி கொள்ளவே மாட்டேன். அவன் எப்படி விரித்தாலும் தப்பித்து விடுவேன்" என்றது. "அது என்ன தந்திரம் எங்களுக்கும் சொல்லேன்" என பெரிய மீன்கள் கேட்டன.

"அட அது மிக சுலபமே. மீனவன் வந்து என்னை பிடிக்க வலை விரிக்கையில் எல்லாம், நான் அவன் காலடியில் சென்று விடுவேன். அந்த இடத்திற்கு மட்டும், வலை வரவே வராது அல்லவா? அவன் காலடியில் எப்படி வலை வரும்? அதனால் நான் மாட்டி கொள்வதில்லை. நாளை அவன் வருகையிலும் இதையே செய்வேன்" என்று சமத்காரமாய் பேசியது.

பெரிய மீன்கள் எல்லாம் குட்டி மீனின் புத்திசாலித்தனத்தை பாராட்டின. இதுபோலவேதான், மாயை என்னும் வலையில் இருந்து தப்பிக்கவே முடியாது. ஆனாலும் ஒரு வழி இருக்கிறது. குருநாதனின் காலடியில் சரணடைந்தால், மாயையென்னும் வலையிலிருந்து தப்பிக்கலாம்.

<u>மஹாமக மஹோத்ஸவ வேதபாராயணம்</u> (பின் அட்டை)

ஸ்ரீஸ்வாமிஜியின் ஆக்ஞைப்படி கும்பகோணம் மஹாமக வைபவத்தை ஒட்டி, கும்பகோணம் சாஸ்திரா பல்கலைக்கழக வளாகத்தில் மஹாரண்யம் ஸ்ரீஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி கைங்கரிய சபா சார்பில், பிப்ரவரி 12 முதல் பிப்ரவரி 22 வரை வேத, திவ்யபிரபந்த பாராயணம் நடைபெற்றது. இப்பாராயணத்தில் ஸ்ரீசாந்தீபனி குருகுலம் சென்னை, ஹைதராபாத், ஸ்ரீரங்கம், வேதாரண்யம் மற்றும் திருநாங்கூர் ஸ்ரீமதி ஜெயந்தி ஜானகிராமன் நினைவு திராவிட வேத ஆகம பாடசாலை முதலியவற்றில் அத்யயனம் பூர்த்தி செய்த முன்னாள் வித்யார்த்திகள் பங்கேற்றனர். சாஸ்திரா பல்கலைகழகம் துணைவேந்தர் திரு.சேதுராமன் அவர்கள், இப்பாராயணத்திற்கு இடமளித்து தங்கும் வசதி மற்றும் போஜனமளித்து பேருதவி புரிந்துள்ளார்கள். பூர்த்தி சமயத்தில் ஸ்ரீஸ்வாமிஜி பிரசாதம் கொடுத்து அனுப்பினார்கள்.

*ஜனவரி* **21** Global Organisation for Divinity G.O.D சார்பில் *சென்னை* காமராஜர் அரங்கத்தில் இரு பகுதிகளாக *மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை* நடைபெற்றது. பாக்யநாதன்ஜி மற்றும் ராமானுஜம்ஜி மாணவர்களை ஊக்கப்படுத்தி பேசினர். பாக்யநாதன்ஜி பேசுகையில் **Pertain to Roots, Practice, Persevere, Pray -** என நம்மை வளர்த்து தயார்படுத்திய பெற்றோர், ஆசிரியர் மற்றும் குருவை மறக்காமலிருத்தல், நன்கு படித்தல், தளராமல் முயற்சி செய்தல் மற்றும் தெய்வத்திடம் பிரார்த்தனை என்பதை விடாமல் பிடித்து கொள்ள வேண்டும் என பேசினார். ராமானுஜம்ஜி **Refocus, Refresh, Rejoice** - என எது முக்கியமான விஷயமோ அதில் ஆர்வத்தையும் கவனத்தையும் செலுத்தி பழக வேண்டும் என்பதையும், பொழுதுபோக்கு அம்சங்களை கட்டுக்குள் வைத்து கொள்ள வேண்டும் என்றும் அப்படி செய்தால் தேர்வில் மட்டுமன்றி வாழ்விலும் எதிலும் வெற்றி பெற முடியும் என்பதையும் எடுத்து பேசினார். உதாரணங்கள் அனைத்தும் மாணவர்களை பெரிதும் கவர்ந்தது. இந்நிகழ்ச்சி மாணவர்கள் உற்சாகமாக கலந்து கொள்ளுமாறு அமைந்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ ஆறாயிரம் மாணவமணிகள் சுமார் **60** பள்ளிகளில் இருந்து கலந்து கொண்ட இதில், ஆசிரியர்கள், ஆர்வமுடன் மாணவர்கள் கலந்து கொண்டு ஒழுங்குடன் இருந்ததை கண்டு மிகவும் பாராட்டியும் இந்நிகழ்ச்சி தங்கள் பள்ளிகளுக்கு மிகுந்த நன்மை தருவதையும் எடுத்து பேசினர். தஞ்சை சாஸ்திரா பல்கலைக்கழகம் இந்நிகழ்ச்சியை இணைந்து வழங்கியது. **GRT Grand** மாணவர்களுக்கான சிறப்பு ஆஹாரத்தை ஏற்பாடு செய்திருந்தது.

இதே போல் *பெங்களூர்* ஞானஜோதி ஆடிட்டோரியத்தில் *ஜனவரி 28* அன்று *மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை* நடைபெற்றது. **25**பள்ளிகளில் இருந்து **1500** மாணவமணிகள் கலந்து கொண்டனர். திரு.அபிஷேக், குமார்ஜி, குருமூர்த்திஜி மற்றும் ராமானுஜம்ஜி மாணாக்கர்களை ஊக்கப்படுத்தி பேசினர். ராமானுஜம்ஜி சென்ற வருடம்

போலவே **28** மாணாக்கர்களுக்கு **G.O.D** சார்பில் ஸ்காலர்ஷிப்களை வழங்கினார். பள்ளிகளின் நிர்வாகத்தினர் **G.O.D** அமைப்பின் இந்த நிகழ்ச்சி மிகுந்த பயனுள்ளதாக இருப்பது குறித்து பாராட்டி பேசினர்.

*பிப்ரவரி 12 ஸ்ரீகல்யாண ஸ்ரீனிவாச பெருமாள் பிரதிஷ்டா தினம்* – வசந்த பஞ்சமி அன்று பிரதிஷ்டா தின வைபவத்தை ஒட்டி பெருமாளுக்கு சிறப்பு திருமஞ்சனமும் அலங்காரமும் நடைபெற்றது. ஸ்ரீஸ்வாமிஜி தம் திருக்கரங்களால் அனைவருக்கும் தீர்த்த பிரசாதம் வழங்கினார்கள். மாலையில் ஸ்ரீபத்மாவதி - ஸ்ரீகல்யாணஸ்ரீனிவாசன் கல்யாண உற்சவம் ஸ்ரீஸ்வாமிஜி முன்னிலையில் மிக சிறப்பாக நடைபெற்றது.

*பிப்ரவரி 13 சாது போஜனம் திருவண்ணாமலை - யோகிராம்சுரத்குமார் ஆஸ்ரமத்தில்* **200**வது இலவச மருத்துவ முகாமும் மற்றும் **200**வது மாத சாது போஜன விழாவும் நடைபெற்றது. சேவையாளர்களை பாராட்டி ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பேசும்பொழுது ஒருவர் ஞான சித்தி அடைய மூன்று நெறிமுறைகளை பின்பற்ற வேண்டும் - 'ஒன்று குருவை பிரகாசப்படுத்தி எப்பொழுதுமே குருவை பற்றி பேசி எவ்வளவு பேருக்கு அவருடைய அனுக்ரஹங்களை வாழ்க்கையில் கொண்டு போய் சேர்க்க முடியுமோ அதை சேர்ப்பது, குருவின் திருவடிகளை பற்றிக்கொண்டு எப்பொழுதுமே பூஜை செய்வது, மூன்றாவது அன்னதானம் செய்வது - சரீரத்திற்கு வேண்டிய அன்னம் மற்றும் ஆரோக்யமாக இருக்க வைத்யம் இரண்டும் இங்கு செய்யப்படுகிறது' என்று அருளுரை வழங்கினார்கள்.

*பிப்ரவரி கோபகுடீரம் ஆண்டு விழா* – ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் வழிகாட்டுதலின்படி குழந்தைகளுக்கு நமது பாரம்பரிய பொக்கிஷங்களை கொண்டு சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கோபகுடீரம் உலகெங்கிலும் பல இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. சென்னையில் கோபகுடீர ஆண்டு விழா பிப்ரவரி **14**ஆம் தேதி தாராசந்த் கலாடா ஜெயின் பள்ளியில் நடைபெற்றது. Wondrous whispers from Ancient India என்ற தலைப்பின் கீழே

குழந்தைகள் குழுக்களாக சேர்ந்து வேதம், யோகம், புராணங்கள், ஆயுர்வேதம், பாரதீய கலாசாரம், தர்மம் முதலியவற்றை ஒட்டி ஒரு கண்காட்சியை நிகழ்த்தினார்கள். இதை ஸ்ரீஸ்வாமிஜி அவர்கள் பார்வையிட்டு, குழந்தைகளின் கலைவண்ணத்தை ரசித்து, மிகவும் ஆனந்தமடைந்தார்கள். குழந்தைகளை ஆசிர்வதித்து அருளுரையும் வழங்கி பரிசுகளையும் வழங்கினார்கள். **300**க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டு வழங்கிய இந்நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக அமைந்திருந்தது. இதில் தேசப்பற்று குறித்த ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சியை குழந்தைகள் வழங்கினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

*தூத்துக்குடி நாமத்வார் பிரதிஷ்டா தினத்தை ஒட்டி* ஸ்ரீபம்மல்





பாலாஜி தூத்துக்குடி நாமத்வாரில் மாதுரீஸகீ ஸமேத ஸ்ரீப்ரேமிக வரதனுக்கு நந்தோத்ஸவம், கோவிந்த பட்டாபிஷேகம், ராதாகல்யாண மஹோத்ஸவ வைபவங்களை நிகழ்த்தினார். இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட அன்பர்கள் கலந்து கொண்டு திருவருளும் குருவருளும் பெற்று சென்றனர்.

*மாணவர்களுக்கான மஹாமந்திர கூட்டு பிரார்த்தனை* – முரளிஜி ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் மங்களூர், சேலம், தர்மபுரி, குடியாத்தம் உள்ளிட்ட ஊர்களில் சுமார் **26** பள்ளிகளில் **13500** மாணவர்கள் முன்பாக மஹாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை நிகழ்த்தி மாணாக்கர்களை ஊக்கப்படுத்தி பேசினார்.

*மகாமகம் – நாமகீர்த்தனம் பிப்ரவரி 22*

விருதுநகர் நாமத்வார் சார்பாக அன்பர்கள் குழுவாக கும்பகோணம் சென்று, மஹாமக வைபவத்தை ஒட்டி பிப்ரவரி **22** அன்று மஹாமந்திர நாமகீர்த்தனம் செய்தனர்.

# ப்ருந்தாவனமும் நந்தகுமாரனும்



- ஜனனி

## ஸ்ரீ ஹரி பாபாஜீ -2

*கங்கையின் வெள்ளத்திலிருந்து **700**கிராமங்களை காப்பாற்ற, ஹரிபாபா, ஜீவ்புர் எனும் க்ராமத்திலிருந்து ராஜ்காட் வரை, **20**மைல் நீள, **75**அடி அகல, **12**அடி உயரம் கொண்ட ஒரு அணை கட்ட தீர்மானித்து செயலில் இறங்கினார். எண்ணிலடங்காத அவர் பக்தர்களும் பாபாவுடன் சேர்ந்து மண் அடிக்க துவங்கினார்கள். ... சென்ற இதழில்*

ஆனால் இந்த மாபெரும் வேலைக்கு அதிக அளவில் பணமும், இன்ஜினியர்களும், வேலையாட்களும் தேவையாக இருந்தது. சரீர உழைப்பினால் மட்டும் இந்த வேலை முடிந்துவிடாதல்லவா? அதனால் பாபா அவ்வப்பொழுது பக்தர்களுடன் பிக்ஷை எடுக்க செல்வார். சில காலத்திற்குள்ளாகவே எல்லா ஏற்பாடுகளும் செய்தாகிவிட்டது. வேலையிலிருந்து ஓய்வு பெற்ற பக்தர்களான இன்ஜினியர்களும், ஓவர்ஸியர்களும் பணம் ஏதும் பெற்றுக் கொள்ளாமல், வேலை செய்ய தொடங்கினார்கள். ஆண்-பெண், வயதானோர், சிறுவர்-சிறுமியர், இளைஞர்கள் என்று ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு, மண் அடிக்கும் வேலையில் ஈடுபட்டனர். அதைத் தவிர ஆயிரக்கணக்கில் பல்லாயிரக்கணக்கில் செலவு செய்து வேலையாட்களும், காண்ட்ராக்டர்களும் நியமிக்கப்பட்டனர். பல மோட்டார் வண்டிகளும், மாட்டு வண்டிகளும், ட்ரக்குகளும், ஒட்டகங்களும், மண் அடிப்பதற்கு மண் கொண்டு வர எங்கெங்கிருந்தோ வந்து சேர்ந்தன. இத்தனை ஜனங்களுக்கும் உணவு ஏற்பாடு செய்ய, ஒரு பெரிய பண்டார் நிர்மாணம் செய்யப்பட்டது. ஹரிநாம ஸங்கீர்த்தனத்துடன், வேலை மிகவும் வேகமாக முன்னேறியது.

ஏதாவது ஒரு இடத்தில் வேலை சற்று தொய்வதைக் கண்டால், பாபா அங்கு தானே சென்று, அவ்வேலையில் ஈடுபடுவார். உடன் வேலை செய்வோருக்கு ஊக்கம் அளித்து, அவர்களுள் சக்தியை பாய்ச்சி உற்சாகத்துடன் மீண்டும் வேலையில் ஈடுபடும்படி செய்வார்.

எல்லா இடத்திலிருந்தும் சரியான வேகத்தில் வேலை நடந்து வருவதாக தகவல் வந்து கொண்டிருந்தது. நாட்கள் சென்று கொண்டிருந்தன. குறிப்பிட்ட தேதிக்குள் மண் அடிக்கும் வேலை முடிந்துவிடும் என்று எல்லோருக்கும் நம்பிக்கை வந்துவிட்டது. சித்திரை சுக்லாஷ்டமியன்று பாபாவிடம் மண் முழுவதுமாக அடிக்கப்பட்டுவிட்டது என்று செய்தி கூறப்பட்டது. பாபா தானே சென்று வேலை முடிந்துவிட்டதா என்று மேற்பார்வை பார்க்க சென்றபோதுதான், ஒரு காண்ட்ராக்டரின் தவறினால் ஒரு இடத்தில் பல நாட்களின் வேலை நடைபெறாதிருந்தது தெரிய வந்தது. அதனால் பாபா தனது ப்ரதிக்ஞையின்படி அன்ன-பானம் செய்யாமல், மண் அடித்துக் கொண்டே ப்ராண த்யாகம் செய்வது, என்று முடிவெடுத்துவிட்டார்.

இதைக் கேட்டு எல்லோரும் வெலவெலத்து விட்டனர். குதிரையில் சில ஆட்களை, பக்கத்து க்ராமங்களுக்கு அனுப்பினார்கள். அந்த க்ராமங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டு வந்து, பெரிய பெரிய கூடைகளிலும், பாண்டுகளிலும் மண்ணை நிரப்பி, மண் அடித்து இரவு பத்து மணிக்குள் வேலை முடிந்தாகிவிட்டது. வேலை முடிந்ததும் பாபா எல்லோரையும் வெகுவாக பாராட்டினார்.

அடுத்த நாள் ராமநவமி உத்ஸவம் மிகவும் விமரிசையாக கொண்டாடப்பட்டது. இந்த உத்ஸவத்தில் பத்தாயிரம் பேர் கூடியிருந்தனர். அன்றிலிருந்து அணையில் ஜல்லி கொட்டும் வேலை ஆரம்பித்தது. ஆனி மாதத்திற்குள் அந்த வேலையும் முடிவடைந்தது.

ஆடி மாதம், கங்கா தேவி எப்பொழுதும் போல் பொங்கினாள். ஆனால், அணையின் காரணம் அவளால் இந்த 700 க்ராமங்களுக்கு எந்த சேதத்தையும் ஏற்படுத்த முடியவில்லை. ஆவணி தசமியிலிருந்து, ஷரத பௌர்ணமி வரை அணை நிர்மாணம் செய்ததையொட்டி, ஒரு உத்ஸவம் கொண்டாடப்பட்டது. அகண்ட கீர்த்தனம், ராஸ லீலை, ப்ரவசனங்கள் என்று இந்த உத்ஸவம் மிகவும் விமரிசையாக நடந்தது.

(தொடரும்)

# *மாலே மணிவண்ணா - 145*




–மகாவித்துவான்
மயிலம். வே. சிவசுப்பிரமணியன்

*மணி மருள் தகை வகை நெறி செறி ஒலி பொலி*
*அவிர் நிமிர் புகழ் கூந்தல்.*
*பிணி நெகிழ் துளையினை தெளியொளி திகழ் ஞெகிழ்*
*தெரியரி மது மகிழ் பரிமலர் மகிழ் உண்கண், வாணுதலோர்*
*மணி மயில் தொழில் எழில் இகல் மலி திகழ் பிறிது*
*இகழ் கடுங் கடாக் களிற்று அண்ணல் அவரோடு,*
*அணி மிக வந்திறைஞ்ச, அல் இகப்பப் பிணி நீங்க,*
*நல்லவை எல்லாம் இயைதரும்-தொல் சீர்*
*வரை வாய் தழுவிய கல் சேர் கிடக்கைக்*
*குளவாய் அமர்ந்தான் நகர்*

இனி, பழமையான புகழுடைய மலையிடத்தே பொருந்தியுள்ள பெருங்கற்கள் நெருங்கி கிடக்கும் இருப்பில் குளத்திடத்தே அமர்ந்தவனாகிய ஆதிசேடனது திருக்கோயிலை சொல்கிறார்.

வரை வாய் - மலை இடம் என்றாகும். வாய் என்பது ஏழாம் வேற்றுமை இடப்பொருள் உருவாகவும், இடம் என்னும் பொருளிலும் பயன்படுவது. அதுவே வரைவாய், குளவாய் என வந்துள்ளது. கல்சேர் கிடக்கை என்பது சுற்றிலும் கற்கள் நிரம்பியுள்ள இடத்தின் நடுவில் உள்ள குளத்திடத்தே அமர்ந்தான் என்று திருக்கோயிலை காட்டுகிறார்.

இது மாடக்குளக்கீழ் மதுரை என்பதை நினைப்பிக்கிறது எனலாம். முன்னோர் காலத்து வருணன் ஆலவாய் பெருமான் பெருமையை அறிவதற்காக, கடலை ஏவினான். கடல் காலமல்லாத காலத்து, மிக செருக்கி மேல் எழ வருகின்றபோது என் செய்வோம் என்று, ஆலவாய் அழகனை அனைவரும் சரணடைந்தனர். அடியார் குறை தீர்க்கும் பெருமான் புட்களவர்த்தம் முதலாகிய நான்கு மேகங்களையும் கடல் கவற குடிக்க ஆணையிட்டான்.

அது கண்ட வருணன் சீறி, தன் கட்டுப்பாட்டில் உள்ள மேகங்களை பெருமழை பொழிய செய்தான். பெருமழையால் அனைவரும் வாடுதல் கண்டு பெருமான் நான்கு மேகங்களை நான்கு மாட கூடமாகி வளைய கட்டளையிட்டான் - நான்மாட கூடல் என்றாகியது. அதனுள் அனைவரும் துன்பமின்றி இருந்தனர். வான மழையின் வலி தொலைந்தது.

வருணன் வந்து, பிழை பொறுத்தருள வேண்டி திருவடி பரவி சென்றான் என்பது, திருவிளையாடற் புராணத்தில் நான்மாட கூடலான படலத்திற் கண்ட சரிதம் ஆகும்.

*கூடரு மேகம் நான்கும் மாடமாக் கூடலாலே*
*நாடவர் அதிசயிப்ப நான்மாடக்கூடல் என்று*
*பீடுடை நகர்க்கு நாமம் எங்கணும் பிறங்கிற்று*

என்பது நம்பி திருவிளையாடல். இதை ஒட்டியே மாடக்குளக்கீழ் மதுரை என்ற வழக்கு உண்டாயிற்று.

மாடக்குளம் என்பது மதுரைக்கு மேற்கே உள்ளதோர் இடம். 'மாடக்குளம் பெருகினால் மதுரை பாழ்' என்று ஒரு பழமொழியும் இதை ஒட்டி வழங்குகிறது.

இதனையே '*குளவாய் அமர்ந்தான் நகர்*' என்று பரிபாடல் குறிப்பிடுவது எனலாம். இந்த குளவாய் அமர்ந்தான் திருக்கோயிலில், இருளும் பிணியும் நீங்க நல்லவை எல்லாம் பொருந்தும்.

'*அல் இகப்ப பணி நீங்க நல்லவை எல்லாம் இயை தரும்*' என்றார். *அல்* என்பது இருள். திருக்கோயிலில் மகளிர் மைந்தரோடு வந்து வணங்குகிறார்கள். வாணுதலோர் அண்ணலவரோடு அழகு மிக வந்து வணங்க.

*வாணுதலோர்* - ஒளி படைத்த நெற்றியை உடைய பெண்கள்.

*மணிமருள் தகைவகை* -நீலமணியென்று கண்டார் மருளத்தக்க அழகின் தகையுடைய (கூந்தல்) *நெறி செறி* - சுருண்டு செறிந்த, *ஒலிபொலி* - தழைத்து பெருகிய, அவிர்நிமிர்விளங்கி நீண்ட, புகழ் கூந்தல் - எல்லாரானும் புகழப்படும் கூந்தலை உடைய வாணுதலோர் என இயையும்.

(தொடரும்)

"மதுரமுரளி" ஆண்டு சந்தா ரூ 180. For Details: **+91-44-24895875**

- **D.D /M.O/Cheque in name of Guruji Sri Muralidhara Swamigal Mission** ஏற்றுக்கொள்ளப்படும்.
- சந்தா அனுப்ப முகவரி: **Guruji Sri Muralidhara Swamigal Mission, No. 51, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.**
- மூன்று வருடம் வரை மட்டுமே சந்தா பெற்றுக்கொள்ளப்படுகிறது.
- கொரியரில் பெற விரும்புவோர் கொரியர் செலவை தனியாக செலுத்தி பெறலாம்.
- ஏற்கனவே சந்தாதாரராக இருப்பவர்கள் தங்களது சந்தாவை புதுப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.
- மதுரமுரளி விவரங்களுக்கு helpdesk@madhuramurali.org என்ற மின்னஞ்சலை தொடர்பு கொள்ளவும்.


* Publisher : S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


* Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
* Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
* Advertisements in Madhuramurali are invited.


**ஸ்ரீஸ்வாமிஜி அவர்களின் நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| ஏகாதசி | மார்ச் 5, 19 March 5, 19 |
| மார்ச் 7 | மஹாசிவராத்திரி - கன்யாகுமரி<br>ஸ்ரீஜயஹனுமான் பிரதிஷ்டா தினம் |
| மார்ச் 11,12,13 | ப்ரேமிக வித்யா கேந்திரா - குர்கான் ஆண்டு விழா |

ஸ்ரீஸ்வாமிஜி அவர்களுக்குத் தெரிவிக்க வேண்டிய விஷயங்களை

Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
**HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI**
New No. 51, Old No. 24, 7th Avenue, Ashok Nagar, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org

என்னும் முகவரிக்கு அனுப்பவும்.

**To know about Satsang schedule, events & also to register your prayers, please call +91-9382393833**